பக்கங்கள்: நான்கு
Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4-50

சுடர்: 6 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆடி மீ 04 ௳ சனிக்கிழமை (20-07-1991) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 227

# புலிகளின் தாக்குதலில் பொம்மர், ஹெலி சேதம்!

## மேலும் துருப்புகளைத் தரையிறக்கி முன்னேறுவதற்குப் படையினர் முயற்சி

யாழ்ப்பாணம், ஜூலை 20

வெற்றிலைக்கேணி - கட்டைக்காட்டுப் பகுதியில் தரையிறங்கிய படையினருக்கு உதவியாக நேற்று முன்தினம் குண்டு வீச்சில் ஈடுபட்ட பொம்மர் ஒன்றும், ஹெலி ஒன்றும் விடுதலைப் புலிகளின் தாக்குதலில் சேதம் அடைந்தன.

புலிகளின் எதிர்ப்பினால் இப்பகுதிகளில் இருந்து நகர முடியாமல் திணறும் படையினர் நேற்று கடல் வழியாக மேலும் துருப்புகளைக் குவித்து தமது நிலைகளைப் பலப்படுத்தி, தொடர்ந்து முன்னேற முயன்று வருகின்றனர்.

நேற்று முன்தினம் புலிகள் நடத்திய தாக்குதலில் சேதமுற்ற பொம்மர் அவசர அவசரமாக பலாலியில் தரையிறக்கப்பட்டது.

இதேசமயம் சேதமுற்ற ஹெலிக்கொப்டர் அவசர அவசரமாக பலாலி நோக்கி விரைந்தது என்றும் —

பலாலி முகாமின் தொண்டமனாறுப் பக்கமுள்ள காவல் அரணுக்கு அருகில் அது தரையிறக்கப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது.

[4 ஆம் பக்கம் பார்க்க]

## வவுனியாவில் சூடுபட்டு பெண் பலி!

யாழ்ப்பாணம், ஜூலை 20

வவுனியா மாவட்டம் பேயாடிக்கூழாங்குளம் பகுதியில் நிலைகொண்டுள்ள படையினர் நேற்றுக்காலை 9 மணியளவில் 75 யார் வரையில் முன்னேறி துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் ஒரு பெண் பலியானார்; மற்றும் இருவர் காயமடைந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

[ஒ-3]

## செம்பியன்பற்று பகுதியில் நேற்று விமான குண்டு வீச்சு

தாளையடி, ஜூலை 20

வடமராட்சி கிழக்கு செம்பியன்பற்று, தாளையடி ஆகிய பகுதிகளில் நேற்று விமானக் குண்டு வீச்சு தாக்குதல்கள் இடம்பெற்றன.

செம்பியன்பற்றில் திருமலை, முல்லைத்தீவு மற்றும் மயிலிட்டி அகதிகள் தங்கியுள்ள குடிசைகள் நிறைந்த பகுதிக்கு அருகில் குண்டுகள் வீசப்பட்டன. எனினும் உயிராபத்துக்கள் ஏதும் ஏற்படவில்லை.

தாளையடியில் நடந்த குண்டு வீச்சில் 5 வீடுகள் சேதமடைந்தன.

நேற்று முன்தினம் இரவு 7 மணியளவிலும் குடாரப்புப் பகுதிக்கு தெற்கே அவ்ரோ குண்டு வீச்சுத் தாக்குதலை நடத்தியது.

இதேவேளை—

வெற்றிலைக்கேணியில் இருந்து மேற்கே 6 மைல் தூரத்திலுள்ள தாளையடிப்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## பளையில் சகடை குண்டு வீச்சு

தென்மராட்சி, ஜூலை 20

பளைப் பகுதியில் புதன்கிழமை இரவு சீனச் சகடை விமானம் ஆறு குண்டுகளை இலக்கின்றி வீசித் தாக்கியது.

இப்பகுதி 'மக்கள் பதுங்கு குழிகளுக்குள் புகுந்து பாதுகாப்புத் தேடிக் கொண்டனர்.

(ஓ-117)

## வங்காலையில் மோதல்

மன்னார் மாவட்டம் வங்காலை இராணுவ முகாமில் இருந்து நேற்றுக் காலை 8-30 மணியளவில் முன்னேறிய படையினரை சிறுநாவற்குளத்தில் வைத்து விடுதலைப் புலிகள் வழிமறித்துத் தாக்கினர்.

புலிகளின் கடும் தாக்குதலை அடுத்து அந்த இடத்தில் இருந்து நகர முடியாமல் படையினர் தரித்து நிற்பதாக தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை. நேற்று முன்தினம் பகல் 11-30 மணியளவில் வங்காலை முகாமில் இருந்து முன்னேறிய படையினர் நாகதாழ்வு பகுதியில் இருந்து குடிமனைகளை நோக்கி சரமாரியான துப்பாக்கிப் பிரயோகமும், ஷெல் தாக்குதல்களையும் நடத்தினர்.

ஏற்பட்ட சேதங்கள் குறித்து தெரியவரவில்லை.

[ஒ-3]

## அச்சுவேலியில் நேற்றிரவு ஹெலி தாக்கி இருவர் பலி!

யாழ்ப்பாணம், ஜூலை 20

அச்சுவேலி நாவல்காட்டில் நேற்றிரவு 9 மணிக்கு ஹெலியிலிருந்து மேற்கொள்ளப்பட்ட றொக்கட் தாககுதலில் தந்தையும் மகனும் உயிரிழந்தனர். அதே குடும்பத்தைச் சேர்ந்த ஐவர் காயமடைந்தனர்.


குடும்பத்தினர் இரவு சாப்பிட்டுக்கொண்டிருந்த சமயம் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது.

வீட்டின் மேல் விழுந்த றொக்கட்டினால் வீடு தீப்பற்றி எரிந்து நாசமானது.

நல்லையா ஆறுமுகம் (வயது 55), அவரது மகன் கலைரூபன் (வயது 18) ஆகிய இருவருமே உயிரிழந்தனர்.

இறந்த ஆறுமுகத்தின் மனைவி சரஸ்வதி (வயது 45) ஆபத்தான நிலையில் உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கிறார்.

[4 ஆம் பக்கம் பார்க்க]




A. பிரதான முகாம் B. பழைய நடைமுகாம்

கடும் சண்டை நடைபெற்றுக் கொண்டிருக்கும் வெற்றிலைக்கேணி — கட்டைக்காட்டுப் பகுதிக்கும் ஆனையிறவு முகாம் பகுதிக்கும் இடையேயான பூகோளத் தொடர்பை விளக்கும் வரைபடம் இது.

## படையினரின் தரை இறக்கம் ரூபவாஹினியில் ஒளிபரப்பு

வெற்றிலைக்கேணி—கட்டைக்காட்டுப் பகுதியில் படையினர் மேலும் தரையிறங்குவது பற்றிய செய்திப் படம் நேற்று மாலை ரூபவாஹினிச் செய்தியில் ஒளிபரப்பப்பட்டது.

கரைக்கு நெருக்கமாக நங்கூரமிட்டிருக்கும் பாரிய கப்பலில் இருந்து கவச வாகனங்கள் மற்றும் ஆயுதங்கள் இறக்கப்படுவதும், துருப்புகள் இறங்குவதும் அச் செய்தியில் காட்டப்பட்டன.

வெற்றிலைக்கேணிக்கு வந்த இராணுவத் தளபதி ஹமில்டன் வனசிங்க அங்குள்ள இராணுவ அதிகாரிகளுடன் அளவளாவுவதும் செய்தியில் இடம்பெற்றது.

கவச வாகனங்களைப் படையினர் கடலோரத்திலிருந்து தரைப்பகுதியை நோக்கி — மணல் நிறைந்த பகுதியின் ஊடாக — மிகப் பிரயத்தனப்பட்டு தள்ளிச் செல்வதும் ஒளிபரப்பில் இடம்பெற்றது.

பின்புறத்தில் 'WIN' என்று எழுதப்பட்ட ''ஓட்டோ'' ஒன்றும் படையினரின்பார்வையில்வைத்திருப்பதை காணக்கூடியதாகவிருந்தது.

## புதையும் கவச வாகனங்கள்!

தாளையடி, ஜூலை 20

வெற்றிலைக்கேணிப் பகுதியில் தரையிறங்கிய படையினரின் கவச வாகனங்களும் மற்றும் இராணுவ வாகனங்களும் மணற் பிரதேசமான கரையோரப் பகுதியில் புதையுண்டு போவதால் படையினர் பெரும் நெருக்கடியை எதிர்நோக்குவதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

புலிகளின் தாக்குதலுக்கு ஒருபுறம் முகம் கொடுக்க வேண்டிய படையினர் மறுபுறத்தில் மணலில் புதையுண்டு போகும் வாகனங்களை மீட்பதில் சிக்கல்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

[உ-144]

## தஞ்சாவூரில் ஆயுதங்கள் மீட்பு!

தஞ்சாவூர் கோடியாக்காடு என்னும் இடத்தில் அடர்ந்த காட்டில் நிலத்துக்குக் கீழ் இருந்து தகவல் தொடர்பு சாதனங்களும், பெருமளவு வெடிமருந்துகளும் இந்தியப் புலனாய்வுப் பிரிவினரால் கைப்பற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

ராஜீவ் கொலை தொடர்பாக சில தினங்களுக்கு முன் கைது செய்யப்பட்ட சண்முகம் என்ற நிலப்பிரபு கொடுத்த தகவலின்படி இவை கைப்பற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஈழப் போராளிகளுக்கு தங்க இடம் கொடுத்து அவர்களை உபசரித்தார் என்ற சந்தேகத்தின் பேரிலேயே சண்முகம் கைதுசெய்யப்பட்டிருந்தார்.

(உ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

Typewriters: Standards, Portables, ஆங்கிலம், தமிழ் தட்டச்சு இயந்திரங்கள் மற்றும் 'Facit' Hand Operated Adding Machine விற்பனைக்கு. பியூடோ தட்டச்சு நிலையம், 7, விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம். (ஞானம்ஸ் ஸ்ரூடியோ முன்பாக) (சி/0256)

Box Guitar விற்பனைக்கு உண்டு. விலை ரூபா 2000/- தொடர்பு: காலை 9 மணிக்கு முன்னர் S. N. R படப்பிடிப்பாளர், 4, மணிக்கூட்டு ஒழுங்கை, யாழ்ப்பாணம். (பெருமாள் கோவிலடி) [4210]

### துர்க்கா திருமண சேவை

எல்லா மதங்களிலும் திருமண தொடர்பு செய்து கொடுக்கப்படும். ஜாதகம், புகைப்படத்துடன் தொடர்பு கொள்ளவும். எல்லா நாட்களிலும் தொடர்பு கொள்ளலாம். துர்க்கா திருமண சேவை, வளர்மதி இல்லம், கே. கே. எஸ். வீதி, மல்லாகம். [4175]

### மணமகன் தேவை

யாழ். இந்து குற்றமுள்ள 30 வயது ஆசிரியைக்கும், 28 வயது குற்றமற்ற ஆசிரியைக்கும் தேவை. ஞாயிற்றுக்கிழமையில் சந்திக்கலாம். மங்கள ஏஜென்சி கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம். (17552)

### மணப்பெண் தேவை

செவ்வாய்க் குற்றமுள்ள யாழ். இந்து, ரூபா 4000/- உழைக்கும் Electro Locomo-tive Engine Driverக்கு 27 32 வயதுக்கு இடைப்பட்ட B.Sc. அல்லது A/L மணப்பெண் தேவை. மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம். (17553)

யாழ்ப்பாண கத்தோலிக்க, பிரான்ஸில் குடியுரிமை பெற்ற 33 வயது மணமகனுக்கு மிக்க அழகுள்ள 25 - 30 வயதுக்கு இடைப்பட்ட மணமகளைப் பெற்றோர் தேடுகின்றனர். விரைவில் அனுப்பக் கூடியவர்கள் நேரில் வரவும். மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம். [17550]

### மணப்பெண்கள் தேவை

லண்டன் கத்தோலிக்க 27 வயது M. Sc. க்கும், 32 வயது யாழ். இந்து கனடா குடியுரிமை பெற்ற, 31 வயது லண்டன் I.C.M.A. க்கும், கொழும்பில் வேலை செய்யும் இந்து 32 வயது அரசாங்க உத்தியோகத்தருக்கும், 28 வயது டாக்டருக்கும், மணப்பெண்கள் தேவை. மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம். [17551]

### சோதிடம்

சாதகங்களைக் கைரேகையுடன் ஒப்பிட்டு தீர்க்கமான பலன்களை அறியவும், பிற நாட்டுச் சாதகங்கள், பிரயாணங்கள், உத்தியோகம், திருமணங்கள் துல்லியமாக மாதங்களை அறியவும், திருமணப் பொருத்தங்கள் பெறவும் அழைக்கின்றோம். இராசேந்திரன், "திருவுளம்" கிரிதரன் வீதி, ஆடியபாதம் றோட், கொக்குவில் கிழக்கு. [17565]

வெளிவந்து விட்டது. [ஆகஸ்ட்] "வியாழ மாற்றம்" விலை 6-50. எங்கும் விற்பனையாகின்றது. நூலாசிரியர் [தத்துவ ஞானம், ஜோதிட விஞ்ஞானம்] Prof: சத்தியதாஸன் Mech. E, Elec. E ஞானம்ஸ், சித்தன் கேணி. [17559]

### தேவை

நாற்று மேடைக்குச் செம்மண் (செம்பாட்டு மண்) ஒரு லாண்ட் மாஸ்ரர் பெட்டி கொள்ளளவு தேவைப்படுகிறது. தொடர்பு கொள்ளவும். மில்க்வைற், யாழ்ப்பாணம். [சி/0247]

### சோதிடம்

தீராத கடன் தொல்லை, தொழில் நட்டம், கல்விக் குழப்பம், பருவத்தில் விவாகம் நடவாமை போன்ற பல துரதிர்ஷ்டங்கள் நீங்கி அதிர்ஷ்டமாக வாழ சாதகத்துடன் நேரில் வரவும். அதிர்ஷ்டம் இன்றேல் பணம் திரும்பப்பெற உத்தரவாதம். ஸ்ரீமாவை விநாயகர் சோதிட நிலையம், 146, பருத்தித்துறை வீதி, [அரசடிச்சந்தி] நல்லூர். [17557]


## COMPLAN
### காம்ப்ளான்

இழந்த ஊட்டத்தை பூர்த்தி செய்ய தலைசிறந்த புரதமாகிய பால் புரதம் 20 % மற்றும் உடலுக்குத் தேவையான 22 அத்தியாவசியமான ஊட்டச்சத்துக்கள் அடங்கியது.

3 சுவைகளிலே கிடைக்கிறது

திட்டமிட்ட பரிபூரண உணவு "காம்ப்ளான்"

குழந்தைகள்
கர்ப்பிணிகள் } அனைவருக்குமானது.
முதியோர்

GLAXO [CEYLON] LTD.
P.O. BOX 1653, COLOMBO.

[17285]


## ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 02 — 06 — 1967

மறைவு: 31 — 07 — 1990

### செல்வன் கணேஷ் உதயகுமார்

[கரன் ஸ்ரோர்ஸ் உரிமையாளர்]

திதி: 20 — 07 — 1991

ஓராண்டு மறைந்தாலும் உமது முகமும், செயலும் மறையாது நினைவில் என்றென்றும். நின் ஆத்ம சாந்திக்காக இறைஞ்சும்.

பாசமிகு பெற்றோர்,
சகோதரன், உறவினர், நண்பர்கள்.

மானிப்பாய். [17570]

## ஆன்ம சாந்தி வழிபாடு



மலர்வு: 4 - 9 - 1974

உதிர்வு: 11 - 7 - 1991

### தர்ஷன் பத்திநாதன்

தாயகத்தின் சேவையில் 11 - 7 - 91 இல் தன்னுயிர் நீத்த யாழ். பத்திரிசியார் கல்லூரி மாணவனும், சாரணருமாகிய தர்ஷன் பத்திநாதனின் ஆன்ம இளைப்பாற்றிக்காக 20 - 7 - 91 [இன்று] சனிக்கிழமை பி. ப. 4.30 மணிக்கு யாழ். புனித மரியாள் ஆலயத்தில் திருப்பலிப்பூசை ஒப்புக்கொடுக்கப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் இதில் பங்கு கொண்டு அவரின் ஆத்ம சாந்திக்காக வேண்டுமாறு அழைக்கின்றோம்.

ம. பத்திநாதன்
குடும்பத்தினர்.

23, கண்டி வீதி,
யாழ்ப்பாணம். [illegible]

## விசேட அறிவித்தல்

தற்கால நாட்டு நிலமை காரணமாக 21-07-1991 இல் யாழ். கைலாசபதி கலையரங்கில் மேடையேற இருந்த புலவர் செ. து. தெட்சணாமூர்த்தியின்

### "இந்த மண் எங்களின் சொந்த மண்"

என்னும் வரலாற்று நாடகம் பின்போடப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.

மேடையேறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

- கந்தர்மடம் சனசமூக நிலையம்.

[17562]

## 2ஆவது ஆண்டு நினைவலைகள்



வையம் தந்தது: 19 — 09 — 1957

தெய்வம் எடுத்தது: 20 — 07 — 1989

செல்வி

### றஞ்ஜித நீலா கணபதிப்பிள்ளை

திதி: 28 — 07 — 1991

ஈராண்டு சென்றிட்டாலும்
இறைவனில் நீ வாழ்ந்திட்டாலும்
எம் துயரம் மாறாதம்மா
எமது கண்ணீர் ஓயாதம்மா.

பெற்றோர், சகோதரர்கள்,
மைத்துனர்மார், மைத்துனிமார்,
பெறாமக்கள், மருமக்கள்.

47, இராமநாதன் வீதி,
யாழ்ப்பாணம். [17564]

## 31 ஆவது நாள் நினைவு தினம்



தோற்றம்: 12 — 05 — 1906

மறைவு: 20 — 06 — 1991

திருமதி

### மரியாம்பிள்ளை விறிசிற்றம்மா

(முத்தம்மா)

சீவியத்தில் அன்பு செய்தோம்
மரணத்திலும் மறவாதிருப்போம்.

ஆண்டவரே! உமது சித்தத்தின்படி உம்மிடம் வந்துவிட்ட மரியாம்பிள்ளை விறிசிற்றம்மா அவர்களின் ஆன்மா சாந்தி பெற அருள் கூறுமாறு வேண்டுகின்றோம். இவரின் இவ்வுலக குற்றங்கள் நீங்கப்பெற்று முடிவில்லா இன்ப வாழ்வு கிடைக்கக் கருணை கூர்ந்தருளும்.

உங்கள் பிரிவால் துயருறும்:
மகன், மகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர்கள்.

கரம்பொன் தெற்கு,
ஊர்காவற்றுறை. [17549]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### பக்க விளைவல்ல

ஆனையிறவில் போர் தொடங்கிப் பத்து நாட்கள் முடிந்து விட்டன. அந்தப் பத்து நாட்களிலும் போரைச் சாட்டி வடமராட்சி கிழக்கு மற்றும் தென்மராட்சி, ஆனையிறவுப் பிரதேசங்களில் அரசாங்கப் படைகள் மக்கள் சொத்துகளுக்குப் பேரழிவை உண்டாக்கி வருகின்றன.

விமானக் குண்டுகள், ஹெலியின் கிரனேட் குண்டுகள், முகாம்களில் இருந்து ஏவப்படும் எறிகுண்டுகள் [ஷெல்கள்] என்பன ஏராளமான உடைமைகளைச் சேதமுறச் செய்திருக்கின்றன. ஆலயங்கள், வைத்திய சாலைகள், பாடசாலைகள் உட்பட பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், வர்த்தக நிலையங்கள், மக்களின் மனைகள் என்று சேதமுற்றவற்றின் பட்டியல் நீளும்.

இராணுவ நடவடிக்கையில் தாம் வெற்றி பெற வேண்டும் என்ற நோக்கத்தை மட்டுமே முன்னிறுத்தி படையினர் இந்தப் பேரழிவுகளைச் செய்கிறார்கள் என்று எண்ணக் கூடாது.

அதாவது இராணுவ இலக்கினை மட்டும் கருத்திற் கொண்டு படையினர் செயற்படும்போது, தமிழ் மக்களின் உடைமைகளுக்கு ஏற்படும் சேதங்கள் பக்க விளைவுகளே; அவை தவிர்க்க முடியாதவை என்று வாதாட முடியாது.

தமிழ்ப் பிரதேசத்தில், எந்தளவுக்கு அதிக சேதங்களை உண்டாக்க முடியுமோ, அந்தளவுக்கு அழிவு செய்ய வேண்டும் என்பது அரசின் உள்நோக்கம். அந்த நோக்கத்தைச் செயற்படுத்த இராணுவ நடவடிக்கை என்ற போர்வையை அது நன்றாகப் போர்த்திக் கொள்கிறது!

கப்பல்களில் இருந்து எரிகுண்டுகளை வீசி தமிழர்களின் சகலஉடைமைகளையும்,பயிர் வகைகளையும் எரிப்பது எந்த நோக்கத்துடன்? விமானங்களில் இருந்து கண்ட கண்டவாறு தீக்குண்டுகளை வீசுவது எதற்காக? இராணுவ நடவடிக்கையின் ஓரங்கமாகவா? இல்லவே இல்லை!

இராணுவ நடவடிக்கைகளால் தமிழ்ப் பிரதேசங்களைக் கைப்பற்றமுடியாவிட்டாலும், அவற்றைத் தீயிட்டேனும் அழித்துவிட வேண்டும் என்பதற்காகவே யாம். தமிழ் மண்ணை, அதன் சீரிளமையைச் சிதைத்துப் பொசுக்கிவிட வேண்டும் என்ற சூழ்ச்சியுடனேயே, இந்த வம்புத்தனங்கள் யாவும் நடக்கின்றன.

சிங்களப் பிரதேசத்தில் இப்படி ஓர் இராணுவ நடவடிக்கையை மேற்கொள்ள அரசு துணியுமா? சிங்கள மக்கள் வாழும் பிரதேசத்தை நோக்கி ஒரு தனி எறிகணையைத் தானும் அது வீசுமா? 1989 இல் நடந்த ஜே. வி. பிக்கு எதிரான நடவடிக்கையின் போது அப்படி ஒரு சம்பவம் நடந்ததா? அது அரசின் சொந்த மண் அல்லவா? சொந்த மண்ணைச் சிதைக்கவோ அன்றித் தீயிட்டுப் பொசுக்கவோ எப்படி அவர்களுக்கு மனம் இசையும்?

அரசுக்கும், அதன் படைகளுக்கும் தமிழ் மண் அந்நிய மண். அங்கு வாழும் தமிழ் அடிமைகளை அடக்கி ஆள வேண்டும். அதன் பொருட்டு நடத்தப்படும் உளவியல் போரைப் போல, மண்ணைச் சிதைப்பதும் ஒரு வகைப் போராகவே கருதப்பட வேண்டும்; இராணுவ நடவடிக்கைகளின் பக்க விளைவுகளாகப் பார்க்கப்படக்கூடாது.

தமிழ் மண்ணைச் சிதைத்து, அதன் பொலிவைப் பொசுக்கி விட்டால், மக்களின் உரிமைப் போராட்டத்துக்கு ஒரு தலையடி போடலாம் என்று அரசு கணக்குப் போட்டிருக்கலாம்!

---

### விமானம் மாறி ஏறுவதற்காக

# பிரான்ஸில் இறங்க இனிவிஸா அவசியம்

பாரீஸ், ஜுலை 20

அடுத்த விமானத்திற்கு மாறுவதற்காக பிரான்ஸ் விமான நிலையத்தில் இறங்குவதானால் கூட இனிமேல் இதற்காக விஸா எனப்படும் தனி அனுமதியை இலங்கை நாட்டவர் பெற வேண்டும் என்று இலங்கையில் உள்ள பிரெஞ்சு தூதரகம் அறிவித்துள்ளது.

இவ்வாறு தனி விஸா எடுக்காவிடில் இவர்கள் விமானத்தை விட்டு பிரான்ஸ் விமான நிலையத்தில் இறங்க அனுமதிக்கப்படமாட்டார்கள் என்று தூதரகம் தெரிவித்துள்ளது.

பிரான்ஸ் வழியாக வேறு நாடுகளுக்குச் செல்லும் இலங்கையர் பிரான்ஸிலேயே இறங்கி அங்கு அரசியல் தஞ்சம் கோருவதால், பிரான்ஸ் இந்த நடவடிக்கையை மேற்கொண்டிருப்பதாகக் கூறப்படுகிறது. (உ-எ)

## ஈழத் தமிழர் பதிவு செய்ய காலக்கெடு நீடிப்பு இல்லை

### முதல்வர் ஜெயலலிதா அறிவிப்பு

தமிழகத்தில் முகாம்களுக்கு வெளியே தங்கி இருக்கும் இலங்கைத் தமிழ் அகதிகள் தங்கள் பெயர் மற்றும் விவரங்களை பொலீஸ் நிலையங்களில் பதிவு செய்ய வழங்கப்பட்டுள்ள காலக்கெடு இனியும் நீடிக்கப்படமாட்டாது.

முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா இத்தகவலை, புதுடில்லியில் இருந்து கடந்த வியாழன் சென்னை திரும்பிய பின்னர் செய்தியாளர்களைச் சந்தித்தபோது வெளியிட்டார்.

மாநிலத்தில் விடுதலைப் புலிகளின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்த அ. தி. மு. க. அரசுக்கு பூரண உதவியை அளிப்பதாக மத்திய அரசு உறுதியளித்துள்ளது என்றும் செல்வி ஜெயலலிதா சொன்னார்.

தமிழகத்தில் கொமாண்டோ பொலீஸ் படைக்கு என தனி அக்கடமி ஒன்று நிறுவப்படும் என்றும் —

பொலீஸ் படையை நவீனமயப்படுத்த 70 கோடி ரூபா தேவைப்படுகிறது என்றும் அவர் சொன்னார்.

**26,000 பேர் மட்டுமே பதிவு**

இதேவேளை —

தமிழகத்தில் தங்கியுள்ள ஈழ அகதிகளில் 26 ஆயிரம் பேர் மட்டுமே தமது விவரங்களை பொலீஸ் நிலையங்களில் பதிவு செய்துள்ளனர்.

முகாம்களுக்கு வெளியே ஒரு லட்சம் வரையான அகதிகள் தங்கியிருப்பதாக மதிப்பீடு செய்தபோதும், பதிவு செய்யும் இறுதி நாளான நேற்றுவரை 26 ஆயிரம் பேரே பதிவு செய்திருந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-எ-3)

## வி.பி.சிங் அருகே சிவராசன்; வீடியோ கஸட் சிக்கியது!

சென்னை, ஜுலை 20

முன்னாள் பிரதமர் வி. பி. சிங்குக்கு அருகில் ராஜீவ் காந்தி கொலை தொடர்பாகத் தேடப்பட்டு வரும் சிவராசன் நிற்கும் வீடியோ கஸட் ஒன்று புலனாய்வுப் பகுதியினருக்குக் கிடைத்துள்ளது என்று சென்னைச் செய்திகள் தெரிவித்தன.

சென்னைக்கு தேர்தல் பிரசாரம் செய்ய திரு. வி. பி. சிங் வந்த சமயத்தில் இந்த வீடியோ கஸட் எடுக்கப்பட்டதாம்.

தலைவர்களுக்கு அருகில் எவ்வளவு நெருக்கமாகச் செல்ல முடியும் என்பதை பார்க்கும் ஒத்திகை நடவடிக்கையாக இந்த வீடியோ படம் எடுக்கப்பட்டது என்றும் அச்செய்திகள் கூறின.

## பிரதான வீதியைத் தவிர்க்க மாணவருக்குவேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஜுலை 20

மாணவ, மாணவிகள் பாடசாலைக்குச் செல்லும் போது பிரதான வீதிகளைத் தவிர்த்து உள் பாதைகளைப் பயன்படுத்த வேண்டும் என்று தமிழீழ காவல்துறையினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக அவர்கள் விடுத்த அறிக்கை வருமாறு:

யுத்தம் ஆரம்பமான நாள் தொட்டு தமிழீழ காவல் துறையின் போக்குவரத்துப் பிரிவினர் குடாநாட்டின் பிரதான பாதைகள் பலவற்றில் வீதிப் போக்குவரத்துத் தடைகளை ஏற்படுத்தியுள்ளனர்.

பெரியோர்கள், பாடசாலை மாணவ, மாணவிகள், சாரணச் சிறுவர்கள் ஆகியோரின் பூரண ஒத்துழைப்புடன் வீதிப் போக்குவரத்துத் தடைகள் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன.

நேற்று குடாநாட்டின் சகல பாடசாலைகளும் மீண்டும் திறக்கப்பட்டுள்ளன. வீதிப் போக்குவரத்துக் கட்டுப்படுத்தப்பட்டிருக்கும் [illegible] கூட மாணவ [illegible] செல்லவேண்டியுள்ளனர். அதேசமயம் இயக்க உறுப்பினர் செல்லும் வாகனங்களும் தங்கு தடைகள் எதுவும் இன்றி இலகுவாகச் செல்லவேண்டியுள்ளது.

எல்லோரினதும் நலன்களை மனதிற் கொண்டு பாடசாலை மாணவ, மாணவிகள் பாடசாலைக்கு செல்லும் போது பாதையில் மிக ஓரமாகச் செல்ல வேண்டும். கூட்டம் கூட்டமாக வாகனங்களுக்கு இடையூறாகச் செல்வதைத் தவிர்க்க வேண்டும்.

இயலுமானவரை பிரதான வீதிகளைத் தவிர்த்து உள் பாதைகளினூடாகச் செல்ல முயற்சிக்கவும். எதிரியுடன் யுத்த முனையில் போரிடும் உங்கள் சகோதர, சகோதரிகள் காயப்பட நேர்ந்தால் அல்லது அவர்களுக்கு தேவைகள் ஏற்பட்டால் அவர்களுக்கு உதவி செய்யும் நோக்குடன் வாகனங்கள் மிக வேகமாக வரலாம்.

எனவே இவற்றைக் கருத்திற் கொண்டு, வாகனங்கள் வரும்போது வீதியோரமாக ஒதுங்கி நின்று வழி விட்டுக் கொடுத்த பின் உங்கள் பயணங்களைத் தொடரவும்.

[illegible] காவல் துறையின் போக்குவரத்துப் பிரிவினருக்கு சகல

[4 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

---

## மண்வெட்டிகள், சவள்கள் தந்துதவக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜுலை 20

மண்மூடை தயாரிப்பதற்கு மண்வெட்டி, சவள் போன்ற உபகரணங்கள் மேலும் தேவைப்படுவதால் அவற்றை அதிக எண்ணிக்கையில் தந்து உதவுமாறு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி கேட்டிருக்கிறது.

★ பொதுமக்கள் தந்துதவும் உணவு வகைகளில் கூடியவரை நீண்ட காலம் பேணக்கூடிய பகோடா, முட்டை மாவு, சிப்பி, முறுக்கு, மிக்சர் போன்றவை இடம்பெறுவது வரவேற்கத்தக்கது.

★ வழங்கும் பொருள்களை சிற்றூரவைத் தலைவர், செயலாளருடன் தொடர்பு கொண்டு கிராம, வட்ட, மாவட்ட செயலகங்களில் ஒப்படைக்கவும்.

★ மாவட்டப் பொறுப்பாளரால் ஒப்பமிடப்பட்ட அடையாள அட்டை காண்பிப்பவரிடமே பொருள்களை வழங்கவும்.

★ சாரம், படுக்கை விரிப்பு, மெத்தை போன்றவற்றை பாலம் பொதுப்பணி மன்றத்தில் ஒப்படைக்கலாம்.

—இப்படி விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் யாழ் மாவட்டச் செயலகம் தெரிவித்துள்ளது. (உ)

## படையினர் பலர் உயிரிழப்பு!

வெற்றிலைக்கேணிப் பகுதியில் இடம்பெற்ற மோதல்களில் பல படையினர் உயிரிழந்ததாகவும், பெருமளவு ஆயுதங்களை விடுதலைப் புலிகள் கைப்பற்றியதாகவும் யுத்தமுனைச் செய்திகள் தெரிவித்தன.

நேற்று முன்தினம் இடம்பெற்ற மோதலில் ஓர் அதிகாரி உட்பட 15 படையினர் உயிரிழந்ததாக ஸ்ரீலங்கா இராணுவ வட்டாரங்கள் தெரிவிததன.

போராளிகள் தரப்பிலும் சிலர் வீரமரணம் அடைந்ததாகத் தெரியவந்தது. (உ-3)

## படையினரின் சடலங்கள் ஆங்காங்கே அடக்கம்!

கொழும்பு, ஜுலை 20

வெற்றிலைக்கேணி, ஆனையிறவு பகுதிகளில் நடைபெற்று வரும் சண்டையில் உயிரிழக்கும் படையினரின் சடலங்கள் ஆங்காங்கே அடக்கம் செய்யப்படுகின்றன என்று கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை நான்கு படையினரின் சடலங்கள் கடந்த புதன்கிழமை ராகம பகுதிக்குக் கொண்டு வரப்பட்டன என்று இன்னொரு கொழும்புச் செய்தி தெரிவிக்கின்றது. [இ-எ]

## 30 தமிழக மீனவர் கைது

சர்வதேச எல்லையை மீறி மீன்பிடித்த 30 தமிழக மீனவர்களை கடலோரக் கடற்படையினர் கைது செய்தனர்.

புதுக்கோட்டை - ஜகதா பகுதியைச் சேர்ந்த இம் மீனவர்கள், தமிழக அரசின் கரையில் இருந்து ஐந்து மைல் எல்லைக்குள் மீன் பிடிக்க வேண்டும் என்ற உத்தரவை மீறி தொழில் செய்தபோது பிடிக்கப்பட்டார்கள்.

30 மீனவர்களும் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். அப்போது கைப்பற்றப்பட்ட எட்டு இயந்திரப் படகுகளும் ஒப்படைக்கப்பட்டன. (இ-எ)

### வகுப்புகளை நிறுத்த கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜுலை 20

சகல தனியார் கல்வி நிலையங்களும் மறு அறிவித்தல் வரை வகுப்புக்கள் அனைத்தையும் நிறுத்தி போர்க்காலச் சூழலுக்கேற்ப ஒத்துழைப்பு வழங்கும் படி தனியார் கல்வி நிலைய ஒன்றியச் செயலாளர் கேட்டுள்ளார். (ஒ)

### ஆலோசனை கூட்டம்

யாழ்ப்பாணம், ஜுலை 20

யாழ். மாவட்டத்தில் மட்டுப்படுத்தப்பட்ட தபால் சேவையை நடத்துவது சம்பந்தமான ஆலோசனைக் கூட்டம் நாளை மறுதினம் [திங்கள்] காலை 9. 30 மணிக்கு யாழ். பிரதம தபாலகத்தில் நடைபெறவிருக்கிறது.

சம்பந்தப்பட்ட அனைவரையும் அன்றைய தினம் சமூகம் தருமாறு மாவட்ட தபால் அத்தியட்சகர் கேட்டுள்ளார். [ஒ-3]

### மக்கள் அஞ்சலி

யாழ்ப்பாணம், ஜுலை 20

வெற்றிலைக்கேணி — கட்டைக்காடு நேரடி மோதலில் களப்பலியான போராளிகள் எண்மரின் புகழுடல்கள் நேற்று வட்டுக்கோட்டை திருஞானசம்பந்த வித்தியாசாலையில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தன.

பல நூற்றுக்கணக்கான மக்கள் புகழுடல்களுக்கு அஞ்சலி செலுத்தினர்.

விடுதலைப் புலிகள் பிரமுகர்களும் அங்கு அஞ்சலியுரை நிகழ்த்தினர்.

இறுதியில் புகழுடல்கள் கோப்பாய் மாவீரர் துயில் கொள்ளும் புனித இடத்தில் தீயுடன் சங்கமமாகின. (ஒ-15)

### முல்லைத்தீவில் இருந்தும் நகர முயற்சியாம்

கொழும்பு, ஜுலை 20

முல்லைத்தீவில் இருந்து சொக்குவேலி வழியாக யாழ். நோக்கி முன்னேற படையினர் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

இப்படி கொழும்பு பத்திரிகைச் செய்தி ஒன்று கூறுகிறது. (இ-எ)

### சேவைக் கால பயிற்சி

யாழ்ப்பாணம், ஜுலை 20

யாழ். மாவட்டப் பாடசாலைகளில் 7 ஆம், 8 ஆம், 9 ஆம் ஆண்டுகளில் ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான சேவைக்காலப் பயிற்சி எதிர்வரும் 22 ஆம், 23 ஆம் 24 ஆம் திகதிகளில் யாழ், மானிப்பாய், கோப்பாய் வட்டார ரீதியில் முறையே வேம்படி மகளிர் கல்லூரி, இராமநாதன் கல்லூரி, கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி ஆகிய இடங்களில் நடைபெறவுள்ளது. (ஒ-5)

### பீரங்கிக் குண்டுகள்

தென்மராட்சி, ஜுலை 20

வடமராட்சி கிழக்கு மாமுனைப் பகுதியில் தரித்து நிற்கும் பீரங்கிப் படகிலிருந்து ஏவப்படும் பீரங்கிக் குண்டுகள் பளைப் பகுதியின் பல இடங்களில் விழுந்து வெடிக்கின்றன. (ஒ-117)

## உடுவில் மகளிர் கல்லூரி
# அறிவித்தல்

தவிர்க்க முடியாத காரணத்தால் க. பொ. த. உயர்தர மாணவர்களின் ஒன்றுகூடல் வைபவம் பிற்போடப்பட்டுள்ளது.

(17571) — அதிபர்.

# நன்றி நவிலல்

## அமரர் குமாரலிங்கம் ரஞ்சகுமார்
(விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம்)

14-07-1991 அன்று இவ்வுலகை நீத்த யாழ். பல்கலைக்கழக அரசறிவியல்துறை விரிவுரையாளர் ரஞ்சகுமார் அவர்களின் அகால மரணத்தைப் பத்திரிகை மூலமாகவோ, தனிப்பட்ட முறையிலோ அறிவித்தல் கொடுக்க முடியாத நிலையில் நாங்கள் இருந்தோம். எனினும் அவரின் மரணத்தை அறிந்ததும், ஏராளமான நண்பர்கள், அபிமானிகள், அன்பர்கள், யாழ். பல்கலைக் கழக உபவேந்தர், பீடாதிபதிகள், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், மாணவர்கள், மற்றும் பல்கலைக்கழக உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், உறவினர்கள் உட்பட, பல சிரமங்கள், கட்டுப்பாடுகள், கஷ்டங்கள் மத்தியிலும், அன்னாரின் இல்லத்திற்கு வருகை தந்து, கண்ணீர் அஞ்சலி செலுத்தியமை மாத்திரமல்லாது இறுதிக் கிரியைகளிலும் பங்குபற்றி, இரங்கல் உரைகள் நிகழ்த்தி, மயானம் வரை பூதவுடலைத் தாங்கிச் சென்று பல்வேறு உதவிகளைச் செய்தமைக்கு அமரரின் தாய், சகோதரர், சகோதரிகள் சார்பிலும், எனது சார்பிலும் தலை சாய்ந்து எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பல்கலைக் கழக ஆசிரியர் சங்கம், மாணவர் ஒன்றியம், அரசறிவியல்துறை மாணவர், மருத்துவத்துறை மாணவர் சங்கம் முதலானோர் விடுத்த அறிக்கைகளுக்கும், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள் அனைத்துக்கும் மேலும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம்.

15-07-1991 அன்றிரவு 'புலிகளின் குரல்' நிகழ்ச்சியில் அமரர் ரஞ்சகுமாரைப் பற்றிய புகழாரங்கள் அனைத்திற்கும், அந்நிறுவனத்தாருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்னும் பல ஈடுபாடுகளில் தங்கள் பங்களிப்பைத் தாமாகவே செய்து, தங்கள் துயரத்தையும் பொருட்படுத்தாது, எங்கள் இழப்பில் பங்குகொண்ட அனைவருக்கும் எமது நன்றி.

செல்லையா குமாரசுவாமி
[பெரிய தகப்பன்]

நுணாவில்,
சாவகச்சேரி.
[சி-0257]

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகரண அழைப்பும்

### அமரர் துரையப்பா இரதநாயகம்
[இளைப்பாறிய வடபிராந்திய போக்குவரத்துச் சபை இலிகிதர்]



தோற்றம் : 1923-01-29

மறைவு : 1991-06-21

அன்னாரது சபிண்டீகரணக் கிரியைகள் நாளை ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும். இவ்வைபவத்தில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு பணிவன்புடன் அழைக்கின்றோம்.

வீரபத்திரர் கோவில் வீதி,
கல்வியங்காடு,
யாழ்ப்பாணம்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்.
[17292]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 20-07-1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## மீனவர் மீது தாக்குதல்

சென்னை, ஜூலை 20

தூத்துக்குடியில் இருந்து மீன்பிடிக்கச் சென்ற இந்திய மீனவர்களில் நால்வர் இனந்தெரியாதோரால் கடலில் வைத்துத் தாக்கப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

காயங்களுக்குள்ளான நான்கு மீனவர்களில் இருவர் தூத்துக்குடி மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டனர். [இ-எ]

## தமிழகத் தேர்தல்

சென்னை, ஜூலை 20

தமிழ் நாட்டில் காங்கேயம், துறைமுகம், எழும்பூர் மற்றும் முசிறி ஆகிய சட்டசபை தொகுதிகளுக்கான இடைத் தேர்தல் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 24 ஆம் திகதி நடைபெறும் என்று அறிவிக்கப்படுகிறது.

இதேவேளை —

தமிழ் நாட்டில் சகல உள்ளுராட்சி மன்றங்களுக்குமான தேர்தல் எதிர்வரும் ஆகஸ்ட் 30 ஆம் திகதி நடைபெறும். [உ-எ]

## மக்கள் வங்கி திங்கள் திறப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 20

யாழ். மக்கள் வங்கிக் கிளைகள் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் அலுவல்களுக்காக நாளை மறு தினம் (திங்கள்) முதல் திறந்திருக்கும்.

இக் கிளைகளில் கணக்கு வைத்துள்ள சங்கங்கள் சம்பந்தப்பட்ட வங்கி முகாமையாளருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்படுகின்றன. (ஒ)

## அச்சுவேலியில்...
[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

ஆறுமுகத்தின் மைத்துனர் நாகன் கந்தசாமி (வயது 46), பிள்ளைகளான கலைமகள் (வயது 20), கலைரூபி (வயது 16), கலாமோகனதாஸ் (வயது 14) ஆகியோரும் காயமடைந்தனர். (உ-15)

## புலிகளின்..
[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

இதற்கிடையில் —

வெற்றிலைக்கேணி — கட்டைக்காட்டுப் பகுதியில் நேற்று ஆறாவது நாளாகத் தொடர்ந்து சண்டை நடைபெற்றது.

படையினர் நேற்று முன்னேறும் முயற்சியில் ஈடுபடவில்லை. எனினும் விமான மற்றும் ஹெலித் தாக்குதல்கள் நேற்று உக்கிரமாக இடம்பெற்றன.

புலிகளின் கடும் எதிர்ப்பினால் இப்பகுதியில் நகர முடியாது சிக்கியிருக்கும் படையினர் தமது பலத்தை அதிகரித்து அதன் மூலம் ஆனையிறவு நோக்கி நகரத் திட்டமிட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்காக நேற்று மேலும் நானூறு துருப்புகள வெற்றிலைக்கேணிப் பகுதியில் தரையிறக்கப்பட்டதாக ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவித்தன.

இதனிடையில் —

இராணுவத் தளபதி லெப்டினனட் ஜெனரல் ஹமில்டன் வனசிங்க கடல் வழியாக நேற்று வெற்றிலைக்கேணிப் பகுதிக்குச் சென்றார்.

இராணுவத் தளபதியே நேரடியாக யுத்தமுனைக்குச் செல்ல வேண்டிய அளவுககு வெற்றிலைக்கேணிப் பகுதியில் படையினர் மீது அழுத்தம் கொடுக்கப்பட்டிருப்பதாக சுயாதீன வட்டாரங்கள் சுட்டிக்காட்டின. (உ-3-144)

## பிரதான..
(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

வழிகளிலும் ஒத்துழைப்பு நல்கி வரும் அன்பர்கள், பெரியோர்கள் அனைவருக்கும் தமிழீழ காவல் துறைப் பொறுப்பாளர் தமது நன்றியைத் தெரிவித்துள்ளார்.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [இ]

## செம்பியன்பற்று..
[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

பகுதியில் விமானப் படையினரின் தாக்குதல்கள் தீவிரமடைந்துள்ளன.

அத்துடன் இப்பகுதியில் விமானங்களும், ஹெலிகளும் அடிக்கடி நோட்டமிட்டு வருவதால், மக்கள் பெரும் பீதியடைந்துள்ளனர். (ஓ-144)

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

அன்புடையீர்!

அமரத்துவம் எய்திய எமது குடும்பத் தலைவர்
தவில் வித்துவான்
### என். ஆர். சின்னராசா
அவர்களின்

அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (20-07-1991) சனிக்கிழமை காலையிலும், வீட்டுக்கிருத்தியம் நாளை (21-07-1991) ஞாயிற்றுக்கிழமை பகல் 10.00 மணிக்கும் எமது இல்லத்தில் நடைபெற உள்ளன. இவ்விரு நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டு எங்கள் தலைவரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்:
அன்னை, மனைவி, மக்கள், மருகர்.

கந்தசாமி கோவில் வீதி,
இணுவில்.
[சி-0248]

# மரண அறிவித்தல்கள்

## கணபதிப்பிள்ளை தெய்வானைப்பிள்ளை

புங்குடுதீவு 6ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை தெய்வானைப்பிள்ளை 16-7-91 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற [பண்ணை] கணபதிப்பிள்ளையின் அன்பு மனைவியும், காமாட்சி, சர்வானந்தன் [குணம்], காலஞ்சென்ற பாலன் ஆகியோரின் அன்புத் தாயாரும், வரதராசா [ஜேர்மனி], புவனேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியாரும், பொன்னையா, காலஞ்சென்ற கந்தையா, சுப்ரமணியம், கார்த்திகேசு [கனடா], காலஞ்சென்ற செல்லத்துரை, நடராசா [ஆசிரியர்], அன்னப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரியும், கோபி [ஜேர்மனி], பாபு [கனடா], மைதிலி [கனடா], திவா [கனடா[, சங்கர் [கனடா] வசி [கனடா] பானு, மலர்விழி, மகிழ்விழி, இளங்கோ, விஜயபாஸ்கரன், உதயபானு, சிந்துஜா, சஞ்சீவன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார். அன்னாரின் தகனக்கிரியைகள் 17.7.91 புதன்கிழமை மாலை 4-00 மணியளவில் புங்குடுதீவு, கேரதீவு மயானத்தில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
திருமதி காமாட்சி வரதராசன்,
(குணம்)

6ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு.
[17566]

## எஸ். இராஜேந்திரம்
[ஓய்வுபெற்ற R. M. P.]

சங்கானை 7-ம் கட்டையடியைச் சேர்ந்த ஓய்வு பெற்ற உதவி வைத்தியர் எஸ். இராஜேந்திரம் நேற்று (19-7-1991) காலமாகிவிட்டார்.

ஈமக்கிரியைகள் பற்றிய விவரம் நாளை அறிவிக்கப்படும்.

தகவல்:
திருமதி இராஜேந்திரம்,
பிள்ளைகள்

சங்கானை.
[17292]

## கந்தையா சின்னத்துரை

புங்குடுதீவு 3 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த கந்தையா சின்னத்துரை காலமானார். இவர் காலம் சென்ற செல்லம்மாவின் அன்புக் கணவரும், திருமதி தி. கலாநிதி, திரு. லோகநாதன், திருமதி ச. தயாநிதி, திருமதி ப. புஸ்பநிதி, செல்வன் புஸ்பநாதன், செல்வன் நகுலநாதன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் திரு. இ. தியாகராஜா (பிரதம லிகிதர் கச்சேரி முல்லைத்தீவு), திருமதி லோ. ராஜேஸ்வரி, திரு. மு. சச்சிதானந்தம் (முன்னாள் பொது முகாமையாளர் ப. நோ. கூ. ச. புங்குடுதீவு), திரு. நா. பரமநாதன் (முரசுமோட்டை) ஆகியோரின் அன்பு மாமனாரும் திரு. க. ராமலிங்கம், திருமதி குணசிங்கம் நாகம்மா, காலம்சென்றவர்களான க. செல்லையா (கலால் பகுதி), க. நடராஜா (சங்கீத பூஷணம்), க. விஸ்வலிங்கம் ஆகியோரின் சகோதரருமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று 51, அம்மன் வீதி, சந்தர்மடம் இல்லத்தில் பி. ப. 2 மணியளவில் ஈமக்கிரியைகள் நடைபெற்று தகனக் கிரியைக்காக கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். உற்றார், உறவினர் யாவரும் இவ் அறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
தி. கலாநிதி
(மகள்)

51, அம்மன் வீதி,
(A. Baur & Co Ltd)
யாழ்ப்பாணம்.
(17293)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org